(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 208.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 ஓகத்து 22, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1383/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஏற்பட்ட,

(i) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) ஐந்தொகையுடன் இறுதி வரவு செலவுக் கணக்கு எவ்வளவு என்பதையும்;

தனித்தனியாக அவர் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான காசுப்பாய்ச்சல் எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் சொத்துக்கள் என்ன என்பதையும்;

(iii) இலங்கை நாணயப் படி ஒரு மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட செலவை ஏற்படுத்திய மைதானங்கள் அல்லது ஏனைய விடயங்கள் எவை என்பதையும்;

(iv) மேற்படி செலவினங்களை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களின் பெயர்களை தனித்தனியாகவும்;

(ii) 2010 மற்றும் 2011 முதல் இற்றைவரை பணியாளர்களுக்கான கொடுப்பனவிற்காக ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1643/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதுராவளை அரசாங்கப் பாடசாலை மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தற்போது, மேற்படி பாடசாலைக்குரிய பல இலட்சம் ரூபாய் பெறுமதிவாய்ந்த கட்டிடங்கள் சிதைவடைந்து வருகின்றன என்பதையும்;

(iii) பிரதேசத்தின் சிறுவர் சிறுமியர்களுக்காக, மீண்டும் இப்பாடசாலையை திறந்து வைக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையை திறக்காவிடின், வேறு பயனுள்ள பொருளாதார நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்காக எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருளாதார நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1987/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டளவில் உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்த தனியார் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாதுகாப்பு நிறுவனத்தினாலும் பாதுகாப்பு வழங்கப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) 2010ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் தற்போது செலுத்தப்படும் பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் மாதாந்தம் பாதுகாப்புக்காக செலவிடும் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2349/ '12

4.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு மாகாண சபையின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) முன்பள்ளிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் பதிவுக்கான நியதிச்சட்டங்கள் அல்லது சட்டங்கள் வகுக்கப்பட்டு அதன்படி செயலாற்றுகின்ற மாகாண சபைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

2502/ '12

5.

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகப் பிரிவின் புலுதொட்ட கடமுதுனவில் அமைந்துள்ள சுற்றுலா விடுதி நிர்மாண, பொறியியல் சேவைகள் வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சருக்கு உரித்தானதா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றுலா விடுதி தற்போது வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்பதையும் ;

(iii) இது குத்தகைக்கு விடப்பட்ட போது கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக முன்வைக்கப்பட்ட விலைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி சுற்றுலா விடுதி குத்தகைக்கு விடப்பட்ட கேள்விப் பத்திரத்தின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) மேற்படி கேள்விப் பத்திரமானது முன்வைக்கப்பட்ட ஆகக்கூடிய பெறுமதியைக் கொண்ட கேள்விப் பத்திரமல்ல என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து மீண்டும் கேள்விப் பத்திரங்களை கோருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2623/ '12

6.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புகையிரத திணைக்களத்தின் வகுப்பு - II தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக எழுத்து மூலப் பரீட்சையொன்று 2010.07.31 ஆம் திகதி நடத்தப்பட்டதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக,

(i) எழுத்து மூல பரீட்சை நடத்துவதற்கு உரிய வர்த்தமான அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி;

(ii) செய்முறைப் பரீட்சைகள் நடத்தப்பட்ட திகதி;

(iii) நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட திகதி

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) புகையிரத திணைக்களத்தில் நிலவுகின்ற மேற்படி (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் சித்தியடைந்தோரைக் கொண்டு நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வகுப்பு - II தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2778/ '12

7.

கௌரவ அஜித் பி.பெரேரா,— தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு மேல் வான் பரப்பில் ஒரு செய்மதியை நிறுவதற்கான கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்துக்காக மதிப்பிடப்பட்ட செலவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2849/ '12

8.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரித்தான இரண்டு மாடிக் கட்டடமொன்றை குத்தகைக்கு வழங்குவதற்காக 2011 டிசெம்பர் 19 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் யாவை என்பதையும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய கேள்விப் பத்திரங்கள் கோரலின் போது கவனத்தில் கொள்ளப்படுகின்றதும் முன்னுரிமை வழங்கப்படுகின்றதுமான விடயங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி கட்டடத்தை,

(i) பெற்றுக் கொள்வதற்கு ரூபா 320,000/- மற்றும் ரூபா 355,000/- என்றவகையில் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பதையும்;

(ii) கேள்விப் பத்திர விண்ணப்பத்தையேனும் சமர்ப்பிக்காத ஒருவருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குத்தகைக்கு வழங்குவதில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(iv) முறைகேடான முறையில் வழங்கியதன் காரணமாக விண்ணப்பதாரர்களுக்கு அநீதியும், குறித்த கூட்டுறவுச் சங்கத்திற்கு நட்டமும் ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) உச்சளவான கேள்விப் பத்திரத்துக்கு கட்டடம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது கட்டடம் வழங்கப்பட்டுள்ளவரிடமிருந்து கூட்டுறவுச் சங்கம் பெற்றுக் கொள்கின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி, முறைகேடு தொடர்பாக முறையான விசாரணையை நடாத்தி கேள்விப் பத்திரதாரர்களுக்கு நீதியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு காலம் எவ்வளவு எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1835/ ’11

9.

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 – 2012 ஆம் கல்வி ஆண்டுக்காக அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவ/மாணவிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்காக மாவட்ட இணைப்பதிகாரிகள் இருபத்திரண்டு பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களைப் புறக்கணித்து பயிற்றுவிக்கப்படாத உத்தியோகத்தர்களைக் கொண்டு இப் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன என்பதையும்;

(iv) இதன் காரணமாக இப் பாடநெறிகளின் தரம் குன்றுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பல்கலைக்கழகங்களில் மேற்படி பாடநெறிகளை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதி செலவிடப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2125/11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்முனை மற்றும் சவளக்கடை வீதியில் அமைந்துள்ள கித்தங்கி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாது;

(iii) குறித்த நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க வேண்டியிருந்த திகதியும் பூர்த்தி செய்யவேண்டியிருந்த திகதியும் யாது;

(iv) தற்போது குறித்த நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா;

(v) பூர்த்தி செய்யவேண்டியிருந்த தினத்தில் பூர்த்தி செய்யப்படவில்லையெனில், அதற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளதா;

(vi) ஆமெனில், அப் பணத் தொகை யாது;

(vii) குறித்த நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2350/ '12

11.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டாகும் போது சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சின் கீழ் பதிவுசெய்யப் பெற்றுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள் யாவை என்பதையும்;

(ii) அந்தப் பாடநெறிகளை நடத்தும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியை பின்பற்றியுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணம் அல்லது மாவட்டத்திற்கேற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1836/ '11

12.

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களைச் சார்ந்து வசிக்கும் மக்களில் பெரும்பாலானோருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் கிடையாதென்பதையும்;

(ii) இதனால் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள இயலாதுள்ளதென்பதையும்;

(iii) இதன் காரணமாக தேர்தல் ஆவணங்களில் பெயர்கள் உள்ளடக்கப்படாமையால் வாக்குரிமையைக்கூட இழந்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை வகுப்பாரா;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மாவட்டங்களில் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களுடன் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமையால் கடமைகளை நிறைவேற்றுகையில் மக்களுக்கு மொழிப் பிரச்சினை தோன்றியுள்ளதென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இந்நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு தமது மொழியில் கடமைகளை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய வகையில் கிராம உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணங்கள் கம்பனி தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள திகதிகள் யாவை;

(iii) வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் இலக்கங்கள் மற்றும் வகைகள் யாவை;

(iv) மேற்படி வாகனங்கள் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(v) தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபை மீளப் பெற்றுக்கொண்டுள்ள வாகனங்கள் யாவை;

(vi) மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் நிலைமை பற்றிய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தம்),— 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2012, செத்தெம்பர் மாதம் 18ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

கௌரவ புத்திக பதிரண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"சிறுவர் புனர்வாழ்வு மையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ ஹுனைஸ் பாறூக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"அல் - ஜாமிஅதுல் இஸ்லாமிய்யா அறாபி வித்தியாலயத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

திவிநெகும சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 9.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

10.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1631/ '11

1.

கௌரவ ராஜிவ விஜேசிங்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ், விண்ணப்பமொன்று விடுக்கப்பட்டதன்பேரில் அவ்விண்ணப்பத்தின் மீது விசாரணை முடிவடையும் வரையில் நீதிமன்றம் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு ஒன்றை பிறப்பிக்கவேண்டும் என்பதையும்;

(ii) அத்தகைய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் அவ் விண்ணப்பம் மீது விசாரணை மேற்கொள்வதற்கான ஓர் உத்தரவை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்பதையும்;

(iii) ஓர் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு 12 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு அமுலில் இருக்க வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) விசாரணை மேற்கொள்ளப்படாத மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகளையும்;

(ii) சட்டத்தைப் பிரயோகிக்கத் தவறிய நீதிவான்களை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் பரிகார நடவடிக்கையையும், தாமத்தால் பாதிக்கப் பட்டோருக்கான நட்டஈட்டையும்;

(iii) இடைக்கால உத்தரவொன்றிக்கான இறுதிக் திகதியொன்று காணப்படாத பட்சத்தில் இடைக்கால உத்தரவு சாரா கட்டளையொன்றிக்கு இறுதித் திகதி யொன்று பெற்றுக்கொள்வதன் காரணங்களையும்;

(iv) மேற்படி முரண்பாட்டை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1632/ '11

2.

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 1841 ஆம் ஆண்டின் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் கீழ் 2001 ஆம் வருடம் முதல் இற்றை வரை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் இன்றும் சிறையில் அல்லது வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'திருத்த முடியாத போக்கிரி' (Incorrigible rogues) என்பதன் அர்த்தம் என்னவென்பதையும்;

(ii) அச்சொல் எந்நோக்கத்தின் அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள், அது அவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும் போன்றன தொடர்பாக 2004 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு இல்லையெனில், அக்கட்டளைச்சட்டத்தின் கீழான நடைமுறைகள் சீர்செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள ஏனைய நடைமுறைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2073/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டுக்காக லக் சதொச நிறுவனத்துக்கு பருப்பு வழங்கிய வழங்குநர் அல்லது வழங்குநர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் வர்த்தகப் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி வழங்குநர்களை தெரிவு செய்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், குறித்த கேள்விப் பத்திரத்துக்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்துக்கமைய வழங்குநர்களினால் பருப்பு வழங்கப்பட வேண்டிய கால எல்லை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2074/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் லக் சதொச நிறுவனத்திற்கு சீனி வழங்கிய வழங்குனர் அல்லது வழங்குனர்களின் பெயர்கள், முகவரிகள், வர்த்தகப் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வழங்குனர்களை தெரிவு செய்கின்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கேள்விப் பத்திரத்திற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்திற்கு அமைவாக வழங்குனர்களால் சீனி வழங்கப்பட வேண்டிய கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2075/ ’11

5\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்ரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் லக் சதொச நிறுவனத்திற்கு முட்டை வழங்கிய வழங்குனர் அல்லது வழங்குநர்களின் பெயர்கள், முகவரிகள், வர்த்தகப் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வழங்குநர்களை தெரிவு செய்கின்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கேள்விப் பத்திரத்திற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்திற்கு அமைவாக வழங்குநர்களால் முட்டை வழங்கப்பட வேண்டிய கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2076/ ’11

6\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் லக் சதொச நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் லக் சதொச நிறுவனத்திற்கு கோழி இறைச்சி வழங்கிய வழங்குனர் அல்லது வழங்குனர்களின் பெயர்கள், முகவரிகள், வர்த்தகப் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வழங்குனர்களை தெரிவு செய்கின்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கேள்விப் பத்திரத்திற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்திற்கு அமைவாக வழங்குனர்களால் கோழி இறைச்சி வழங்கப்பட வேண்டிய கால எல்லை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?